கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 170/2022

வாதி தரப்பு சாட்சி – 3 ஸ்ரீபால் திரு.M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 15.10.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஸ்ரீபால் | கிராமம் | |
| த/பெ | தங்கராஜ் | தொழில் | கிராம நிர்வாக அலுவலர், இடையப்பட்டி மேற்கு கிராமம் |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | 40 |

<u>வ.சா.3 – ஸ்ரீபால்– முதல் விசாரணை</u>

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தற்போது இடையப்பட்டி மேற்கு கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு அழைப்பாணை வந்ததை தொடர்ந்து தாவா சொத்தை நேரில் சென்று பார்த்தேன். தாவா சொத்து இடையப்பட்டி மேற்கு கிராமத்தில் புல எண்.1920 ல் அமைந்துள்ளது. அதன் மொத்த விஸ்தீரனம் ஹெக்டேர் 2.66 ஏர்ஸ் ஆகும்.

மேற்படி தாவா சொத்தில் போர்வெல் அமைந்துள்ளது. அது பூமிதான இயக்கத்தில் வழங்கப்பட்ட இடத்தில் அமைந்துள்ளது. தற்போது மேற்படி இடம் யாருடைய பங்கு என்பதை காண்பிக்க எங்கள் அலுவலத்தில் ஆவணங்கள் எதுவும் இல்லை. மேற்படி போர்வெல்லுக்கு மின் மோட்டார் இணைப்பு உள்ளது. மேற்படி மின் மோட்டார் இணைப்பு வாதி சண்முகம் பெயரில் உள்ளது. மேற்படி சர்வே எண்.1920 ல் சுமார் ஏக்கர் 1.33 சென்ட் நிலமான அவரது பங்கில் வாதி சண்முகம் விவசாயம் செய்து வருகிறார். போர்வெல் அமைந்துள்ள இடம் மட்டும் தரிசு நிலமாக உள்ளது.

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் எவ்வளவு காலமாக தாவா கிராமத்தில் பணிபுரிந்து வருகிறேன் என்றால் 3 மாத காலமாக பணிபுரிந்து வருகிறேன். பூமிதான இயக்கத்தில் வழங்கப்பட்ட தாவா சொத்தை பொறுத்து அது யாருக்கு பாத்தியம் என்று

தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி நிலத்தை அளவை செய்து பார்த்தால் மட்டுமே யார் யார் எவ்வளவு விஸ்தீரனம் அனுபவம் செய்து வருகிறார்கள் என்று தெரிய வரும். எனக்கு முன்பு சுப்பிரமணி என்பவர் மேற்படி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பொறுப்பு வகித்தார். மேற்படி சுப்பிரமணி என்பவர் அவரது பணிகாலத்தில் நேர்மையாக தான் சான்று வழங்கியிருப்பார் என்றால் சரிதான்.

2. ஆனால் அதன் விவரங்கள் பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தில் அமைந்துள்ள கிணற்றின் மின் இணைப்பு சம்மந்தமான விவரங்களை மின் வாரியத்தில் இருந்து கேட்டு தெரிந்து கொண்டு சாட்சியம் அளிக்க வந்துள்ளேனா என்றால் இல்லை. இந்நீதிமன்றத்தில் இருந்து தாவா சொத்தை பொறுத்து விசாரணை செய்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டதா என்றால் இல்லை. தாவா சொத்து மற்றும் அதில் அமைந்துளள கிணறு ஆகியவை பூமிதான இயக்கத்தில் வழங்கப்பட்ட நிலமாகும். மேற்படி நிலத்திற்கான பட்டா எண் 635 ஆகும். மேற்படி பட்டாவானது தனிநபர் பெயரில்லை.

3. பூமிதான இயக்கத்தின் பெயரில் உள்ளது. எங்கள் அலுவலக ஆவணங்களின் படி தாவா சொத்தை பொறுத்து வாதி பெயரில் ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள கிணறு மற்றும் பம்பு செட் பொதுவானது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதிக்கு தான் தாவா சொத்து பாத்தியப்பட்டது என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். எனக்கு வந்த அழைப்பாணையில் எதை பற்றி சாட்சியம் அளிக்க என்னை அழைத்ததாக அதில் இடம் பெறவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் அனுபவம் யாரிடம் உள்ளது என்பதை உறுதியாக என்னால் கூற முடியாது என்றால் சரிதான். அழைப்பாணையில் எதை பற்றி சாட்சியம் அளிக்க வேண்டும் என்று குறிப்பிடவில்லை என்பதால் என்னால் முழுமையாக சாட்சியம் அளிக்க முடியாது என்றால் சரியல்ல.

4. தாவா சொத்தை பற்றிய விவரம் எனக்கு முழுமையாக தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்தின் அனுபவத்தில் யார் யார் உள்ளார்கள் என்றால் வாதி சண்முகம் , 1ம் பிரதிவாதி ஆண்டியப்பன் மற்றும் சிலர்

அனுபவம் செய்து வருகிறார்கள். அதில் யார் யாருக்கு எவ்வளவு பங்கு என்று என்னால் கூற முடியாது. 1ம் பிரதிவாதி ஆண்டியப்பன் தாவா சொத்து மற்றும் அதில் உள்ள போர்வெல்லை அனுபவம் செய்து வருவது எனக்கு தெரியும் என்றும், அதனை மறைத்து வாதிக்கு ஆதரவாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**